**பள்ளி கல்வி இயக்ககம்**
**மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்**
**இலாசுப் பேட்டை, புதுச்சேரி**

**செய்திக் குறிப்பு**

புதுச்சேரி அரசு கல்வித் துறையில், பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கிவரும் புதுச்சேரி மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தில் 2021-22 ஆம் கல்வி ஆண்டிற்கான இரண்டாண்டு ஆசிரியர் பட்டயப் படிப்புச் (D.El.Ed.) சேர்க்கைக்கு, புதுச்சேரி யூனியன் ஆட்சிப் பரப்பைச் சேர்ந்த மாணவ மாணவியரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பட்டயப் படிப்பில் சேர விரும்புவோர் மேனிலைப் பள்ளித் தேர்வில் அல்லது அதற்குச் சமமான தேர்வில் குறைந்த பட்சம் 50% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். எனினும், அட்டவணை இனத்தவர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் குறைந்த பட்சம் 45% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும், சேர்க்கைக்கான அதிகபட்ச வயது 29 ஆகும். 31.07.2021 அன்று முடிய 29 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். எனினும் அட்டவணை இனத்தவருக்கு 5 (ஐந்து) ஆண்டுகளும், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 3 (மூன்று) ஆண்டுகளும் வயது வரம்பில் சலுகை உண்டு.

சேர்க்கை விண்ணப்பம் 12.08.2021 முதல் 31.08.2021 வரை அனைத்து அலுவலக நாட்களிலும் புதுச்சேரி, இலாசுப்பேட்டை, தொல்காப்பியர் வீதி, மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தில் கிடைக்கும். மேலும் பள்ளி கல்வித்துறை https://schooledn.py.gov.in என்ற இணையதளத்திலும் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தேவையான நகல் சான்றிதழ்களுடன் 31.08.2021 மாலை 5.00 மணிக்குள் புதுச்சேரி, இலாசுப்பேட்டை, தொல்காப்பியர் வீதி, மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்ய விரும்புவோர் https://forms.gle/Dj6r1eKkaHXB8zoC7 என்ற இணையதளத்தில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பத்தினை பதிவேற்றம் செய்துகொள்ளலாம்.

**முதல்வர்**
**மா.ஆ.ப.நி., புதுவை.**

புதுச்சேரி
நாள்: 09.08.2021